# தேனீ வளர்ப்பு



விவசாயத்தில் வருமானம் குறையும் போது, அதை ஈடுசெய்வது உபத்தொழில்கள்தான். அதில் முக்கியமானது.. தேனீ வளர்ப்பு. பயிர்களில் மகசூலை அதிகப்படுத்துவதுடன், வருமானத்தையும் கொடுப்பதால், தேனீ வளர்க்க விரும்பும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிபரித்து வருகிறது. இப்படி ஆர்வமுள்ள விவசாயிகளுக்காக, தேனீ வளர்ப்பு. பயிர்களில் மகசூலை அதிகப்படுத்துவதுடன், வருமானத்தையும் கொடுப்பதால், தேனீ வளர்க்க விரும்பும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இப்படி ஆர்வமுள்ள விவசாயிகளுக்காக, தேனீ வளர்ப்பு தொடர்பான ஒரு நாள் பயிற்சி, விருதுநகர் மாவட்டம், தளவாய்ப்புரத்தில் உள்ள நேச்சுரல் தேனீப் பண்ணையில், பசுமை விகடனின் ஊடக ஆதரவுடன் ஏப்ரல் 17ம் தேதி நடந்தது. தமிழகம் முழுவதும் இருந்து 80 விவசாயிகள் பங்கேற்றனர்.

இனி, பயிற்சியில் பண்ணையின் உரிமையாளர் ஜெயக்குமார் பேசியதிலிருந்து.. இன்றைக்கு பலபேர் தேனீ வளர்ப்பில் ஆர்வத்தோட இறங்கிட்டு, கொஞ்ச நாட்களிலேயே மகசூல் கிடைக்கலை, தேனீக்கள் ஓடிப்போச்சுனு புலம்பறாங்க. இதற்க்குக் காரணம் முறையானப் பராமரிப்பும், சாயான புரிதலும் இல்லாததுதான். இந்தியத் தேனீயா இருந்தால், அதிகபட்சமா 25 பெட்டியும், இத்தாலியத் தேனீயா இருந்தால் 10 பெட்டி வரைக்கும்தான் ஒரு இடத்தில் வைக்கணும். பெட்டி வைத்த இடத்திலிருந்து குறைந்தது கால் கிலோ மீட்டர் தள்ளித்தான் அடுத்தப் பெட்டிணை வைக்கணும்.

அதே போல் பெட்டி வைக்கும் போது, நம்மத் தோட்டத்தை மட்டும் பார்க்கக்கூடாது. மூன்று ஏக்கர் சுற்றுவட்டாரத்தில் என்னென்ன பயிர்கள் இருக்கு, தேனீக்கு தேவையான உணவு கிடைக்குமா என்று தெரிந்து கொண்டுதான் வைக்கணும்.

ஓரு ஏக்கரில் 80 பெட்டி வைக்கலாம், 100 பெட்டி வைக்கலாம்னு பெட்டி விற்பவங்க சொல்வதைக் கேட்டு, விவசாயிகளும் வாங்கி வைச்சிடறாங்க. ஆனால், போதுமான உணவு கிடைக்காமல் தேனீக்கள் பெட்டியை விட்டு போய்விடும்.

ஒவ்வொரு வருடமும் தேன் அடை, ராணித்தேனீ இதையெல்லாம் மாற்றணும். இதை ரொம்ப பேரு செய்ய மாட்டாங்க. பெட்டியில் இருக்கிற ராணித் தேனீயைக் கொன்னுட்டு அந்தப் பெட்டியில், நல்ல  மகசூல் கொடுக்கும் வேற ஒரு பெட்டியில் இருந்து ஒரு நாள் வயதுள்ள குஞ்சை எடுத்து வைக்கணும். இப்படி வைத்தால் போதும், அது வளர்ந்து ராணீத்தேனீயா மாறிடும். முறையானப் பயிற்சி எடுத்துக்கிட்ட பிறகுதான் இதையெல்லாம் சரியா செய்ய முடியும்.

தேனீ வளர்ப்பில் முக்கியமான விஷயம்.. இடமாற்றம். பெட்டிகளை ஒரே இடத்தில் வருடம் முழுவதும் வைத்திருந்தல்... தேன் கிடைக்காது. தேனீக்களுக்கு உணவு உள்ள இடமா பார்த்து இடமாற்றம் செய்துக்கிட்டே இருக்கணும். தரைப் பகுதியில் ஜனவரி முதல் மார்ச் வரையிலும், வனப்பகுதிகளில் மார்ச் முதல் ஏப்ரல் வரையும் தேன் அதிகமாக கிடைக்கும். மறுபடியும் ஜீன் முதல் ஆகஸ்ட் வரை தரைப்பகுதியில் தேன் கிடைக்கும். செப்டம்பர் முதல் நவம்பர் வரை மழைக்காலமாக இருக்கும். டிசம்பர் மாதம் பெட்டிகளில் பராமரிப்பு வேலைகளை செய்யணும். அதனால், செப்டம்பர் தொடங்கி டிசம்பர் வரைக்கும்மான நான்கு மாதத்திற்க்கும் தேனீக்களுக்கு உணவு கிடைக்காது. அந்த நேரத்தில் நாமதான் அதற்கு உணவு கொடுக்கணும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் முருங்கை, சூரியகாந்தி, எள், நாவல், புளி ஆகிய பயிர்களில் அதிக தேன்  கிடைக்கிறது. தேனீ வளர்ப்பில் இறங்குறவங்க, ஆரம்பத்தில் 5 முதல் 10 பெட்டிக்குள்ள வாங்கி வளர்த்தா போதும். அனுபவம் கிடைத்த பிறகு எண்ணிக்கையை அதிகப்படுத்திக்கலாம். அதை விட்டுட்டு எடுத்தவுடனே 50 பெட்டி, 100 பெட்டினு போனா, நிச்சயம் மகசூல் எடுக்க முடியாது. எடுத்தவுடனே பெரியப் பெட்டிகளில் இருக்கிற, விலை அதிகமான இத்தாலி தேனீயையும் வளர்கக் கூடாது. சின்னப் பெட்டியில் இருக்கிற இந்தியத் தேனீயை வளர்த்து, அனுபவம் வந்த பிறகு பொயப் பெட்டியை வைத்து வளர்க்கலாம். ஆகக்கூடி.. முறையா செஞ்சா.. தேனீ வளர்ப்பு வருமானம் கொட்டும் தொழிலா இருக்கும். என்ற தெளிவாகக் கருத்துக்களை எடுத்து வைத்தார்.

**தொடர்புக்கு :** ஜெயக்குமார் அலைபேசி : 94433-02674

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு, 10.05.11 www.vikatan.com